[1990 ஏப்ரல் 21

தோணித்துறை பாலம்

* **3527** திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் சொத்திக்குப்பம், ராசாபேட்டை பகுதியில் ஜெட்டி (தோணித்துறை பாலம்) அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. இ. புகழேந்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சொத்திக்குப்பம், ராசாப்பேட்டை என்ற இரண்டு கிராம மக்களும் நகர்ப்புறத்திற்கு வரவிருப்பினும் மற்றைய அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லவிருப்பினும் ஆற்றைக் கடந்து வர வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் ஆற்றைக் கடந்து வருவதற்காக தோணிகளிலே வருகின்ற காலங்களில் அவர்களுக்கு ஜெட்டி வசதி இல்லாத காரணத்தினால் தோணி களிலே ஏறுகின்ற போது கர்ப்பிணிப் பெண்களும், சின்னஞ்சிறு குழந்தைகளும் நீண்டதூரம் நீரிலே நடந்து வந்து ஏற வேண்டிய ஒரு நிலை இருப்பதினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வர்ணனைகளைக் குறைத்து வினாத் தொடுங்கள். ஏற்கெனவே நேரம் ஆகி விட்டது.

திரு. இ. புகழேந்தி : இந்த நிலைமைகளை மாற்றுகின்ற வண்ணமாக அரசு அங்கே ஜெட்டி அமைக்கின்ற நிலைக்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, மீனவர்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையிலே ஜெட்டி அமைக்கின்ற திட்டம்தான் மீனளத் துறை பரிசீலனை செய்யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு காரணங்களுக் காக தோணி துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையினை இங்கே வைத்து இருக்கிறார். அது குறித்து போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களைத் தொடர்பு கொண்டு அந்த வினாவிற்குப் பதிலினைப் பெற்றுக்கொள்ளலாம் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.